தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1983 மார்ச் 3.

மாசி 19, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ வன்சொல் வழங்கு வது''.

இனிய சொற்கள் இன்பம் பயத்தலைக் காண்கின்றவன், அவற்றிற்கு மாறான வன் சொற்களை வழங்குவது என்ன பயன் கருதியோ ?

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் [*] உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

1. இரங்கற் குறிப்புகள்

(அ) முன்னாள் உறுப்பினர் திரு அ. மு. மொஹிதீன் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு திருப்பூர் அ. மு. மொஹிதீன் அவர்கள் 22–2–1983 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு அ. மு. மொஹிதீன் அவர்கள் 1971ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டு வரை சென்னை நகரம் துறைமுகம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

45 ஆண்டு காலமாக இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியில் பணிபுரிந்து வந்த இவர், காங்கிரஸ் கட்சியிலும், ஜஸ்டிஸ் கட்சியிலும் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். சுதந்திரப் போராட்டத்திலும், அந்நியத் துணி பகிஷ்கரிப்பு, மதுவிலக்கு போராட்டங்களிலும் பங்கெடுத்துக்கொண்டவர் ஆவார். மேலும் கதர் இயக்க வளர்ப்புப் போராட்டம், ஒத்துழையாமை

இயக்கப் போராட்டம், சாதி ஒழிப்புப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போர்ராட்டம் ஆகிய போராட்டங்களிலும் கலந்து கொண்டவராவர். இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தமிழ்நாடு கிளையின் துணைத் தலைவராகவும், சட்டப் பேரவையின் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவராகவும் நல்ல முறையில் பணி யாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) முன்னாள் ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

1966ஆம் ஆண்டிலிருந்து 1971ஆம் ஆண்டுவரை தமிழக ஆளுநராக பணியாற்றிய சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் 15–2–1983ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் அவரது மறை வால் வருந்தும் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கிறது. சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் 1895ஆம் ஆண்டு பிறந்தார். லாகூர் அரசினர் கல்லூரியில் கல்வி பயின்றார். 1926ஆம் ஆண்டு முதல் 1956ஆம் ஆண்டுவரை பஞ்சாப் மாநிலச் சட்ட மன்றப் உறுப்பினராகவும், 1937ஆம் ஆண்டிலிருந்து 1942ஆம் ஆண்டு வரை பஞ்சாப் அமைச்சரவையில் உள் துறையில் பார்லீ மெண்டரிச் செயலாளராகவும் பதவி வகித்துள்ளார். 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்திலும் தீவிரமாக ஈடுபட்டார். கிழக்கு பஞ்சாப் அரசாங்கத்தில் 1949ஆம் ஆண்டு தொழில் அமைச்சராக இருந்தார். 1952ஆம் ஆண்டிலிருந்து 1956ஆம் ஆண்டு வரை பஞ்சாப் மாநிலத்தில் நிதி மற்றும் தொழில் அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். 1–9–1965 முதல் 27–6–1966 வரை பஞ்சாப் மாநில ஆளுநராகப் பதவி வகித்தார். 1966ஆம் ஆண்டு முதல் 1971ஆம் ஆண்டு வரை தமிழக ஆளுநராகப் பதவி வகித்தார். அவர் இம்மாநிலத்தில் ஆளுநராக இருந்தபோது நல்ல முறையில் பணியாற்றினார். எளிய வாழ்க்கையாலும் உயர்ந்த உள்ளத்தாலும் நம் எல்லோரையும் கவர்ந்தனர். அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறது.

தீர்மானத்தை நிறைவேற்றும் வகையிலும் இறந்த பெரியவர் களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்களை இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.